


01.09.2026

தலைப்புச் செய்திகள்

- தீவிரவாதம் முழுமையாக களையப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
- மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா சம்பா சாகுபடிக்காக முதலமைச்சர் திரு.விஜய் இன்று தண்ணீர் திறந்துவைத்தார்.
- குடும்ப அட்டைதாரர்களுக்கு நாளை மறுநாள் முதல் ஒரு கிலோ வெங்காயம் 35 ரூபாய்க்கு வினியோகிக்கப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.வெங்கட்ரமணன் கூறியுள்ளார்.
- வெற்றி கைவினை கலைஞர்கள் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்று மாநில சிறுகுறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.மதன்ராஜா தெரிவித்தார்.
- இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 52 திருக்கோவில்களில், கைபேசி கொண்டு செல்வதற்கான தடை இன்று அமலுக்கு வந்தது.

## இனி விரிவான செய்திகள்

***************

பிரதமர்

தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும் ஷாங்காய் உறுப்பு நாடுகள் தகர்த்தெறிய வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கில் ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய பிரதமர், தீவிரவாதத்தில் இரட்டை நிலைப்பாடு கூடவே கூடாது என்றார்.

உலகில் பல்வேறு நாடுகளில் நிலவும் குழப்பங்கள் குறித்து கவலை தெரிவித்த பிரதமர், மோதல்களும் போர்களும் பிரச்சனைகளுக்கு தீர்வு ஆகாது என்றும், பேச்சுவார்த்தைகள் தூதரக நடவடிக்கைகள் மூலமே சுமூக தீர்வு எட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சந்தை இணைப்புகள், தடையற்ற வர்த்தகம், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளுக்கான அனைத்து முயற்சிகளுக்கும், இந்தியா முழுஆதரவு அளிக்கும் என்று கூறிய பிரதமர், அதேவேளையில் அனைத்து நாடுகளின் இறையாண்மைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக பிஷ்கெக் பிரகடனத்திலும் ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகள் கையெழுத்திட்டன.

***************

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா சம்பா சாகுபடிக்காக முதலமைச்சர் திரு.விஜய் இன்று தண்ணீர் திறந்துவைததுள்ளார்.

அணையின் வலதுகரையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், எட்டு கண் மதகுகளை மின் விசையால் இயக்கிய முதலமைச்சர் தண்ணீரை விடுவித்தார்.

பின்னர் காவிரி அன்னைக்கு நெல்மணிகளையும் வண்ண மலர்களையும் தூவி வணங்கினார்.

மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.ஆனந்த், போக்குவரத்து அமைச்சர் திரு.விஜய்தமிழன் பார்த்திபன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

மேட்டூர் அணை சார்ந்த வரலாற்று புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டதோடு, அணை சார்ந்த விபரங்களையும் அதிகாரிகளிடம் முதலமைச்சர் கேட்டறிந்தார்.

முதற்கட்டமாக 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், இது 200 கிலோ மீட்டர் பயணித்து மூன்றரை நாட்களில் கல்லணையை சென்றடையும்,

45 நாட்களுக்கு திறக்கப்படும் தண்ணீரின் மூலம் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் உள்ள் 17 லட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெறுகின்றது.

அணை மின் நிலையம், சுரங்க மின் நிலையம், 7 கதவணை மின் நிலையங்கள் வாயிலாக 460 மெகாவாட் மின்சார உற்பத்தியும் தொடங்கியுள்ளது.

அணையின் நீர்மட்டம் 91 அடியை எட்டியுள்ள நிலையில், நீர்வரத்து பத்தாயிரத்து 857 கனஅடியாக உள்ளது.

முன்னதாக அணையை திறக்க மேட்டூர் வந்த முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

****************

சட்டப்பேரவை – ஆதவ் அர்ஜீனா

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று மாநில விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜீனா கூறினார்.

சட்டப்பேரவையில் இன்று 27 உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், டெல்டா மற்றும் தென்மாவட்டந்தோறும், ஒரு பள்ளி தேர்வு செய்யப்பட்டு, சிறப்பு கட்டமைப்புகளுடன் அனைத்து உபகரணங்களும், பள்ளி கல்வி மற்றும் விளையாட்டுத்துறை சார்பில் வழங்கப்படும் என்றார்.

மதுரை மாவட்டத்தில் உலகத்தரம் வாய்ந்த ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்படும் என்றும்,

முதல் கட்டமாக பத்து இடங்களில் ஒலிம்பிக் அகாடமி அமைப்பதற்கு அரசு முடிவெடுத்திருப்பதாகவும் கோவையில் ஒரு மையம், அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாய்ஸ்

உதகை, கல்வராயன்மலை உள்ளிட்ட மலை பகுதிகளிலும் ஒலிம்பிக் அகாடமி அமைக்க அரசு முடிவெடுத்திருப்பதாகவும் கூறினார்.

தமிழகத்தில் உள்ள மாவட்டங்களை எட்டு பகுதிகளாக பிரித்து, அப்பகுதி வீரர்களின் தனித்திறன் அடிப்படையில் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும் என்றார்.

விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் முறை தொடர்ந்து அமல்படுத்தப்படும் என்றார்.

கபடி விளையாட்டை மேம்படுத்தும் வகையில், அதற்கென சிறப்பு தரைவிரிப்புகளை அமைத்து ஊக்குவிக்கப்படும் என்றும், இதற்கென ஒரு சிறப்புத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

நாங்குநேரி தொகுதி வேலவன் குடியிருப்பு கிராமத்தில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு விரைவில் புதிய கட்டிடம் கட்டித்தரப்படும் என்றும், திரு.ஆதவ்அர்ஜீனா கூறினார்.

***************

செங்கோட்டையன்

திருவண்ணாமலை அடிவார கிரிவல பாதையில் வசித்து வரும் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு, உரிய

நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று, மாநில வருவாய்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில், இதுதொடர்பாக, உறுப்பினர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்த அமைச்சர், உயர்நீதிமன்றத்தில் இது குறித்த சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்றும், நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு தகுதியான நபர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அதுவரையிலும் அந்த பகுதியில் உள்ள மக்கள் அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் உறுதியளித்தார்.

***************

அருண்ராஜ்

மருத்துவ கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மருத்துவ மாணாக்கருக்கு நான்கரை ஆண்டுகளுக்கு மட்டுமே மருத்துவ கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.அருண்ராஜ் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், கூடுதலாக கட்டணம் வசூலித்தால் அந்த கல்விநிறுவனங்கள் மீது சட்டரிதியான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்றார்.

****************

அவைத்தலைவர்

தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியை சீரமைத்து பராமரிக்க, 23 கோடி ரூபாய் நிதி

ஒதுக்கப்பட்டிருப்பதாக பேரவைத்தலைவர் திரு.ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள்ளார்.

கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தவெக தலைமயிலான ஆட்சிக்காலம் விளையாட்டுத்துறையின் மறுமலர்ச்சி காலமாக திகழும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த வளாகத்தில் நவீன உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சி கூடம் அமைந்திருப்பதாகவும் இதை உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

விளையாட்டின் முக்கியத்துவத்தை கருதி இந்த ஒரு கேள்விக்கு 23 சட்டமன்ற உறுப்பினர்கள், துணைகேள்விகள் கேட்க தான் அனுமதித்ததாகவும், பேரவைத்தலைவர் கூறினார்.

****************

வெங்கடரமணன்

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த அமைக்கப்பட்டுள்ள தனிக்குழு, வாரம் தோறும் கூடி, உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.வெங்கடரமணன் சட்டப்பேரவையில் இன்று தெரிவித்தார்.

மேலும், இதற்கான உயர்நிலைக்குழு 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடி, விலை உயர்வுள்ள பொருட்களை கூட்டுறவு அங்காடிகளின் மூலம் விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை எடுக்கும் என்றார்.

தற்போது வெங்காய விலை அதிகரித்து வருவதால், தேசிய வேளாண் கூட்டுறவு அமைப்பின் மூலம், ஆயிரம் மெடரிக் டன் வெங்காயத்தை கொள்முதல் செய்து, கூட்டுறவு பண்டக சாலை, அமுதம் அங்காடி மற்றும் நகர்ப்புற நியாயவிலைக் கடைகளில் கிலோ 35 ரூபாய் என்ற விலையில் வினியோகிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாளை மறுநாள் முதல் ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைக்கு தலா ஒரு கிலோ வெங்காயம் வினியோகிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

****************

மதன்ராஜா

கைவினை தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் வெற்றி கைவினை கலைஞர்கள் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்று மாநில குறுசிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.மதன்ராஜா தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கையினை இன்று தாக்கல் செய்து புதிய அறிவிப்புகளை வெளியிட்ட அமைச்சர், இதன்கீழ், கைவினை கலைஞர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படும் என்றார்.

முதலீட்டு மானியத்திட்டத்தின்கீழ் விண்ணப்பித்து நீண்ட காலம் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கு மானியம் வழங்க 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

குறுசிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியம் வழங்க 30 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றார்.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் மூலம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான விளிம்புத்தொகை உதவித்திட்டம் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பட்டு உற்பத்தி்யை ஊக்குவிக்க 600 பட்டு விவசாயிகளுக்கு தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ஆறரை கோடி ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை அமைச்சர் மதன்ராஜா வெளியிட்டார்.

***************

பர்வேஷ்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மானியக்கோரிக்கையினை தாக்கல் செய்து பேசிய இத்துறைக்கான அமைச்சர் திரு.முகமது பர்வேஸ், தமிழ்நாடு இணையம் சார்ந்த தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள ஆயிரம் தொழிலாளர்களுக்கு இ பைக் வாங்குவதற்கான, வங்கி கடன் வட்டித்தொகையை அரசே ஏற்கும் என்றார்.

அயலகம் செல்லும் தமிழ்நாடு கட்டுமான வெற்றிக்கரங்கள் என்ற திட்டம் 15 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

பெருநகரங்களுக்கு வேலை தேடி வரும் கட்டுமான தொழிலாளர்கள் தங்குவதற்காக சென்னை மற்றும் கோவை

ஆகிய நகரங்களில் 14 கோடி ரூபாய் செலவில், தங்குமிடங்கள் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

****************

விஜய்பாலாஜி

கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.விஜய்பாலாஜி இன்று பேரவையில் வெளியிட்ட மானியக்கோரிக்கையில், கைத்தறி ஆதரவு திட்டத்தின்கீழ், 2 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரத்தில் பட்டு ஏற்றுமதி வர்த்தக வசதி மையம் ஏற்படுத்தப்படும் என்றார்.

ஆயிரம் தனிநபர் தறி கூடங்களில் சூரிய ஒளி மின் தகடுகள் அமைக்க 100 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

திருபுவனத்தில் கைத்தறி ஆதரவு திட்டத்தின்கீழ், 80 லட்ச ரூபாய் செலவில் புதிய வடிவமைப்பு நிலையம் அமைக்கப்படும்.

நாகர்கோவிலில் ஒரு கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நவீன விற்பனை வளாகம் ஏற்படுத்தப்படும்.

கதர் மற்றும் பட்டு உற்பத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி பங்குத்தொகை 16 சதவீதமாக உயர்த்தப்படும்.

****************

ரஞ்சித்குமார்

வனப்பகுதிகளில் மனித – விலங்கு மோதலை தடுக்க பல்வேறு பகுதிகளில் சூரிய ஒளி மின்வேலி, எஃகு கம்பி தடுப்பு அமைக்கப்படும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு.ஆர்.வி.ரஞ்சித்குமார் கூறியள்ளார்.

இதற்கென நடப்பு நிதியாண்டில், 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் முதல் கட்டமாக கோவை, தர்மபுரி, ஈரோடு, தென்காசி, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

****************

ராஜ்மோகன்

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தேவையான நிதி உதவியை அரசு வழங்கும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அ மைச்சர் திரு.ராஜ்மோகன் இன்று பேரவையில் அறிவித்தார்.

முதலமைச்சரை கலந்தாலோசித்த பின்னர், இக்குடும்பத்தினருக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளிப்பது அரசு வேலைவாய்ப்பு வழங்குவது உள்ளிட்டவை குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் கூறினார்.

****************

கோவில் கைபேசி

தமிழகத்தில் இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 52 முதுநிலை திருக்கோவில்களுக்குள், பக்தர்கள் கை பேசி கொண்டு செல்வதற்கான தடை இன்று முதல் அமலுக்கு வந்தது.

ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி , சமயபுரம் மாரியம்மன், தஞ்சை பிரகதீஸ்வரர், மதுரை கள்ளழகர், திருவண்ணாமலை

அருணாச்சலேஸ்வரர், அறுபடைவீடுகள் உள்ளிட்ட திருக்கோவில்கள் இவற்றில் அடங்கும்.

பக்தர்கள் தங்கள் கைபேசிகளை திருக்கோவில்களின் கைபேசி பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***************

ஸ்ரீவில்லிப்புத்தூரில் தயாரிக்கப்படும் பால்கோவா விலை அதிகரித்துள்ளது.

உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால், இந்த விலையேற்றம் என எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ்).

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.